பாம்பன் ஸ்வாமிகள் பாதமலர்கள் போற்றி

# சண்முக கவசம்

ஆன்மிகப் பல்சுவைத் திங்களிதழ்

பிப்ரவரி 2014 ✿ விலை ரூ. 15/-



# காலினை இணைத்த வேல் எனும் தெய்வமும் விஞ்ஞான யுகத்தில் நேரடி ஒளிபரப்பும்

சிவத்தமிழ் குகமணி தெ.தனபால்
ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் திருப்பள்ளியெழுச்சி ஆசிரியர்
Email : thiruppalli@yahoo.com Cell : 9444958526

பாரத நாட்டில் ஞானியர் பலர் பிறந்திருந்தாலும், இறைவனைப் பற்றி பல்வேறு பாடல்கள் பாடியிருந்தாலும், இறைவனுடைய மகிமையை உணர்ந்திருந்தாலும், இறைவன் அருள் பாலித்த மகிமையை வருடந்தோறும் கொண்டாடுவது என்பது சிறிது அரிதாகத்தான் உள்ளது. இறைவன் ஏன் ஞானிகளுக்கு அருள்பாலிக்க வேண்டும்? இறைவன் ஏன் நமக்கு அருள்பாலிக்கவில்லையா? நம் வாழ்வில் நடந்த பல அருள்பாலித்த தன்மையை சிலரிடம் மட்டும் கூறி பின்பு நாம் மறந்து விடுவோம். ஆனால் தான் பெற்ற பேரின்பத்தை உலக மக்களும் பெற வேண்டும் என்ற ஒரு உயர்ந்த நோக்கத்துடன், அந்த அருள்பாலித்த தன்மையை ஒரு விழாவாகக் கொண்டாட வேண்டும் என்ற நியதியை நமக்குக் கொடுத்துவிட்டு ஞானிகள் அருஉருவமாக நம்மிடையே வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

இந்த வகையில் மனிதனாகப் பிறந்து, ஞானியாக மாறி, மங்கள மூர்த்தியான மயூரநாதப் பெருமானைப் பாடும் பணியே பணியாய் ஏற்று அப்பரமன் அருளாலே 6666 பாமாலைகள், சாத்திர தோத்திர ஆராய்ச்சி நூல்கள் இயற்றியருளியவர் அத்தியாச்சிரம சுத்தாத்வைத வைதிக சைவ சித்தாந்த ஞானபானு பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள் ஆவார்.

1923ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 27ஆம் நாள், வியாழக்கிழமை அன்று பகல் நேரத்தில் சுவாமிகள் வைத்தியநாத முதலித் தெருவிலிருந்து லிங்கிசெட்டி வீதிக்குச் சென்று, பிறகு அங்கிருந்து தம்புசெட்டித் தெரு வழியாக நடந்து கொண்டிருந்தபோது, வேகமாக வந்த குதிரை வண்டி ஒன்று சுவாமிகள் மேல் மோதியது. வண்டியின் சக்கரம் சுவாமிகளின் இடக் கணுக்கால் மேல் ஏறிக் காலை முரித்து விட்டது. சுவாமிகள் நிலை தடுமாறித் தரையில் சாய, அங்கிருந்த நல்லோர் சிலர் சுவாமிகளைத் தூக்கி நிறுத்தி ஒரு வண்டியில் அமர்த்திவிட்டு "எங்கு செல்ல வேண்டும் சுவாமி?" என்று கேட்டனர், "எனக்கு எதுவும் உரைக்கத் தோன்றவில்லை, உங்கள் விருப்பப்படி செய்து கொள்வீர்களாக" என்று கூறினார் சுவாமிகள்.

ஒருவர் சுவாமிகளை அந்த வண்டியிலேயே அமர்த்திக் கொண்டு அரசுப் பொது மருத்துவமனைக்குச் சென்றார். அங்கே, பெரிதாகவும், மூன்று மாடிகள் கொண்டதாகவும் இருந்த "மன்றோ வார்டு" என்பதில், கீழ்த்தளத்தில் உள்ள 11ஆம் அறையில் சுவாமிகள் சேர்க்கப்பட்டார். சுவாமிகளுக்கு நேர்ந்த விபத்தைக் கேள்விப்பட்டதும் அன்பர்கள் பலர் அந்த இடத்திற்கு வந்து திரண்டனர்.

திருவல்லிக்கேணி சோதிடர் சின்னசாமிப்பிள்ளை ( சுப்பிரமணிய தாசர் ), அவரது மனைவியார், இருவரும் வந்து சுவாமிகளைப் பார்த்துக் கதறி நின்றனர். சிவசங்கரத் தம்பிரான் எனும் அன்பரும் அங்கு வந்து சுவாமிகளின் நிலை கண்டு கண்ணீர் மல்க நின்றார். சிகிச்சை செய்த மருத்துவர்கள் சுவாமிகளின் உடல் நிலையை நன்கு பரிசோதித்தனர். "சுவாமிகள் உணவில் உப்பும், புளியும் அறவே நீத்தவர் ஆதலின், இப்பொழுதுள்ள நிலையில், முரிந்த எலும்புகள் இணைவது கடினமே'' என்று உரைத்தனர். அதைக்கேட்ட அன்பர்கள் அனைவர்க்கும் கவலை மிகுந்தது. சுப்பிரமணியதாசரும், அவரது துணைவியாரும் நாள்தோறும் சுவாமிகளுக்கு வேண்டிய உணவு, பழங்கள், பால் ஆகியவற்றைக் கொண்டு வந்து அளித்தனர்.

சிவசங்கரத் தம்பிரான், ஞானசாகர முதலியார், சுப்பிரமணியதாசர் எனும் மூவரும் சுவாமிகளின் கால் பூரண நலம்பெற வேண்டிச் **சண்முக கவச பாராயணத்தைத்** தொடர்ந்து செய்து வந்தனர். மூவருள்ளும் சுப்பிரமணிய தாசர் பெரிதும் திடநம்பிக்கையும் உறுதியும் கொண்டு இடையறாமல் பாராயணம் செய்து வந்தார்.



K.சுப்பிரமணியதாசர் கவச பாராயணம் செய்யும்போது

**"ஏரகத் தேவன் என்தாள் இருமுழங் காலும் காக்க**
**சீருடைக் கணைக்கால் தன்னைச் சீரலை வாய்த்தே காக்க"**


என்ற அடிகளை ஓதிய வேளையில் ஓர் அற்புதமான காட்சியைக் கண்டார். சுவாமிகளின் முரிந்த கால் பிளவுபட்டு விலகாதிருக்கும் வகையில் இரண்டு வேல்களின் இலையலகுகள் பொருத்தப் பூட்டப்பட்டும் மற்றொரு வேலின் முனை அவற்றைத் தாங்கி நிற்குமாறு நிறுத்தப்பட்டும் காட்சி அளித்தன. செவ்வேளின் கருணைத்திறத்தையும் சுவாமிகள் அருளிய கவசத்தின் ஆற்றலையும் நேரிடையாக உணர்ந்து கொண்ட சுப்பிரமணிய தாசர் உளம் மகிழ்ந்தார்.

கால் முரிவு கண்ட பதினொன்றாம் நாள் (மார்கழி மாதம் 23ஆம் நாள் ; வளர்பிறைப் பிரதமை ; பூராட நட்சத்திரம்) இரவில் சுவாமிகள் ஓர் அற்புதக் காட்சியைக் கண்டார். நிலவுலகும் விண்ணுலகும் கண்டு இன்புறுமாறு இரண்டு மயில்கள் மேற்குத் திசையில் தோன்றிக் களிப்புடன் தோகையை அழகுற விரித்துப் பரப்பித் திருநடம் புரியும் திவ்விய காட்சியைச் சுவாமிகள் கண்டு களிக்குமாறு கந்தவேள் கருணை பாலித்தான். இரண்டு மயில்களுள் ஒன்று பெரியது. அது தனது தோகையை வட்டமாக விரித்து மேலை வானம் முழுவதையும் மறைத்து ஆடியது. பெரிய மயிலின் இடப்புறம் ஆடிய மயில் ஓரளவு சிறிதாகத் திகழ்ந்தது. இரண்டு மயில்களின் கால்களும் நிலத்தில் தோயவில்லை. பொன்மையும் பசுமையும் ஆகிய வண்ணங்கள் தோகைகளில் காணப்பட்டன.

தெய்விகமான இந்தத் திருக்காட்சியைக் கண்டு உளம் குளிர்ந்து இன்பமுற்ற சுவாமிகள் இருகரங்களையும் தலைமேல் கூப்பி வணங்கினார். இரண்டு மயில்களின் திருநடக் காட்சி மேலை வானில் மெல்ல மெல்ல மறைந்தது. "இத்தகைய திருக்காட்சி இனி எப்போது நேரும்?" எனும் வேட்கைமிகப் பெற்றவராய்ச் சுவாமிகள் கண்ணீர் கசிந்தார். மயிலின் திருக்காட்சியிலேயே சிந்தையைப் பதித்திருந்த சுவாமிகள் மகிழும்படி மற்றுமோர் அருள் புரிந்தான் மயில்வாகனன்.

ஒரு நாள் இரவில் செக்கச் சிவந்த திருமேனியுடன் ஒரு குழந்தை வடிவுகொண்டு குகேசமூர்த்தி, சுவாமிகள் தலைவைத்துப் படுத்துள்ள தலையணையின் மேல் கால்நீட்டிக் கொண்டு இருந்த காட்சியைச் சுவாமிகள் கண்டு களித்தார். அந்தக் குழந்தையின் திவ்விய அழகைக் கண்டு மிகவும் பரவசப்பட்ட சுவாமிகள் அதைப் பார்த்துக் கொண்டிருக்கும்போதே, உருவம் மறைந்துவிட்டது. "எனது படுக்கையில் குழந்தையாய் எழுந்தருளி நீ என்னை விட்டு நீங்கவில்லை என்பதைப் புலப்படுத்திய குமரா! ஆண்டவா! நின் திருவிளையாடலால் என் உள்ளம் மகிழ்ந்தது. எனினும் இறந்துபடுவேன் எனக் கருதி இதுவரை பெரிதும் மகிழ்ந்திருந்த என்னை இவ்வுலகில் மேலும் இருக்குமாறு செய்துள்ள நினது திருவுளப்பாங்கை அறிய முடியவில்லையே" எனக் கூறி மனம் கசிந்தார் மாமுனிவர்.

ஓரிரண்டு நாள்கள் சென்றதும், மருத்துவர்கள் சுவாமிகளின் கால் எலும்பைக் காட்டிக் கூடிய படங்களை




எக்ஸ்ரே எடுத்துப் பார்த்தபோது ஒடிந்திருந்த எலும்புகள் ஒன்றாக இணைந்து நிற்பதை அறிந்து மிகவும் மகிழ்ச்சியும் வியப்பும் கொண்டார்.

குதிரை வண்டியின் சொந்தக்காரன் சுவாமிகளுக்கு தன்னால் மிகப் பெரும் துன்பம் வந்தது என்று கண்ணீர்விட்டுக் கதறி அழுதான். அதற்கு சுவாமிகள், மிகவும் கனிவுடன், அவனைத் தேற்றி ஆறுதல் கூறினார். "அன்ப! நீ கவலை கொள்ளக் கூடாது. பார்க்கப் போனால் நான்தான் உனக்கு நன்றி கூற வேண்டும். உன்னால் அல்லவோ எனக்கு மயூரவாகனக் காட்சி மிகவும் அற்புதமாகத் தென்பட்டது. என் ஆண்டவனைக் குழந்தை வடிவத்தில் என் பக்கத்திலேயே பார்க்க முடிந்ததே! நீ தான் எனக்கு உதவி செய்துள்ளாய். நலமாக இருப்பாய்" என்று வாழ்த்தினார்.

புதுப்பாக்கத்திலேயே வாழ்ந்திருந்த வேலாயுத முதலியார், மாசிலாமணி முதலியார், தாமோதர முதலியார் புஷ்பாவதி அம்மாள், ஜீவரத்தினாம்பாள் மற்றும் ஞானசேகர முதலியார் ஆகியோர் சுவாமிகளின் அருகில் இருந்து அவருக்கு வேண்டிய பணிகளைச் செய்து சுவாமிகளை முழு குணம் அடையச் செய்தனர். சுவாமிகளுக்கு ஏற்பட்ட இந்த நிகழ்ச்சியே, சுப்பிரமணிய பரமேசுவரனுக்கு ஒரு நூதன விழா உருவெடுக்க வித்திட்டது. தாம் மருத்துவமனையில் கண்ட அற்புதமான மயில் வாகனக் காட்சி வைபவத்தைச் சுவாமிகள் சிறப்பாகக் கொண்டாட எண்ணம் கொண்டார்.

அதன்படி ஆண்டுதோறும் மார்கழி மாதம் சுக்லபக்ஷப் பிரதமை தினத்திலும் மறுநாளிலும் தொடர்ந்து கொண்டாடப்பட்டு வரும் விழாவிற்கு **''மயூரவாகன சேவனம்''** என்னும் பெயர் சுவாமிகளால் சூட்டப்பட்டது. தமக்கு ஏற்பட்ட கால் முரிவு, வேல் தோன்றி இணைத்து நின்றமை, இரு மயில்கள் காட்சி தந்தமை முதலானவற்றைப் பொருளாகக் கொண்டு சுவாமிகள் எட்டுப்பதிகங்கள் கொண்டதாக **அசோகசால வாசம்** என்ற பெயரில் ஒரு பிரபந்தம் அருளினார். விழாவின் முக்கிய அங்கம், இந்த அசோகசால வாசம் என்னும்

பிரபந்தத்தைப் பாராயணம் செய்வதாகும். தலைவிக்கும் தோழிக்கும் இடையே நடக்கும் சம்பாஷணை வடிவில் இந்த எட்டுப் பதிகங்களும் சுவாமிகளால் பாடப்பட்டன. இந்த விழா எப்படி நிகழ்த்தப்பட வேண்டும் என்பதை விரிவாக விளக்கிச் சுவாமிகளே பத்தி ஒன்று எழுதினார்.சுவாமிகள் தயாரித்த வில் சாசனத்தில் அது இடம் பெற்றுள்ளது.

**இப்படி ஒரு சீரும் சிறப்பு மிக்க விழா எந்த ஒரு நாட்டிலும், எந்த ஒரு ஞானியாலும் உருவாக்கப்பட வில்லை.** இறைவன் அடியார்களுக்கு பல்வேறு விதமாக அருள்பாலித்தாலும், இறைவனுடைய தனிப்பெருங்கருணையினை உலக மக்களும் உணர வேண்டும் என்ற ஒரு சிறந்த நோக்கத்துடன் **இந்த விழா ஏற்படுத்தப்பட்டது ஒரு கின்னஸ் சாதனை தான் என்று கூற வேண்டும்.**

மேற்கூறிய மயில்வாகனக் காட்சியையும், அதனைத் தொடர்ந்து நிகழ்ந்த தெய்வக் கிருபைகளையும், மயூர வாகன சேவன விழாவாக 1924ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வோர் ஆண்டும் மார்கழி மாதத்துப் பூர்வபக்ஷப் பிரதமை தோறும் சுவாமிகள் வெகு சிறப்பாக 1929ஆம் ஆண்டு தாம் சமாதி நிலை அடையும் வரை கொண்டாடினார்கள். இவ்விழாவைக் கொண்டாடுவது தாம் தோற்றுவித்த மகா தேஜோ மண்டல சபையினரின் கடமை எனத் தாம் ஏற்படுத்தி பதிவு செய்த வில் சாசனத்திலும் (17.7.1926) வில்சாசன அனுபந்தத்திலும் (19.12.1927) விளக்கமாகக் கூறியுள்ளார்கள். அவ்வாறே இச்சபையினர் இவ்விழாவைத் தொடர்ந்து நடத்தி வருகிறார்கள்.

அவ்வாறு **இந்த வருடம் 90ஆவது ஆண்டு விழாவாக இந்த மயூர வாகன சேவன விழா அமைந்தது. மகா தேஜோ மண்டல சபை (15/88) தலைவர் பாம்பனார் வாரியார் அடிப்பொடி சித்தாந்த ரத்னம் செ.வே. சதாநந்தன் தலைமையில் வெகு விமரிசையாகக் கொண்டப்பட்டது. இந்த விழா இவ்வருடம் ( விஞ்ஞானயுகத்தில் ) அடியேனால் www.pambanswamigal.net என்ற இணையதளம் மூலம் நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டது.** இதற்கு சுவாமிகளின் ஆசியே மூல காரணம் என்று கூற விரும்புகிறேன். இந்த இணையதளத்தின் மூலம் ஒளிபரப்பு செய்யப்பட்டதால் மலேசியா, அமெரிக்கா, போன்ற நாடுகளில் மக்கள் பார்த்த புள்ளிவிவரக் குறிப்பை தங்களுக்குக் கூறக் கடமைப்பட்டுள்ளேன். அதன் விவரம்:

| | Country / Territory | Visits | % Visits |
|---|---|---|---|
| 1. | India | 1,212 | 43.99% |
| 2. | (not set) | 43 | 3.02% |
| 3. | United States | 41 | 2.88% |
| 4. | Malaysia | 30 | 2.10% |
| 5. | Singapore | 16 | 1.12% |
| 6. | France | 15 | 1.05% |
| 7. | United Arab Emirates | 10 | 0.70% |
| 8. | United Kingdom | 10 | 0.70% |
| 9. | Finland | 7 | 0.49% |
| 10. | Canada | 6 | 0.42% |

எளியேன் செய்த இந்தத் திருப்பணிக்கு **திரு. தினேஷ் அவர்களும், திரு. சிவா, திரு. அருணன்** திருவான்மியூர் மற்றும் பலர் கூடி உதவினர். அவர்களுக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

இக்கட்டுரையின் முக்கிய நோக்கம் என்னவென்றால், இந்தப் பிறவில் நாம் ஒரு ஞானியைக் குருவாக ஏற்றுக் கொண்டு அவர் வகுத்த பாதையை நாமும் தொடர்ந்து, அந்த ஞானிக்குப் பெருமை சேர்ப்பதால் மட்டுமே இந்தப் பிறவியின் கடலில் நீந்தி மீண்டும் பிறவா நிலை என்ற நிலையை உணரமுடியும் என்பது என்னுடைய கருத்தாகும். மேலும் தங்கள் ஊரில் உள்ள தெய்வப்பணிகளை இந்த இணையதளத்துடன் நேரடி ஒளிபரப்பு செய்ய விரும்பும் ஆன்மிக மெய்யன்பர்கள் சண்முக கவசம் ஆசிரியரைத் தொடர்பு கொண்டால் அதற்கான விவரம் தங்களுக்குத் தெரிவிக்கப்படும். நீங்கள் உங்கள் ஊரில் காணுகின்ற காட்சி உலக மக்களும் காண வேண்டும் என்பது இந்த எளியேனின் ஆசையாகும்.

## ஆன்மிகப் பாதையில் செல்லும் சண்முக கவசம் படிக்கும் நேயர்களுக்கு ஒரு புதிய நற்செய்தி

சண்முக கவசம் இதழில் வரும் ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் செய்திகள் தாங்கள் எப்போது வேண்டுமானாலும் படித்துக் கொள்ள இன்றைய விஞ்ஞானத் துறையில் மிகப் பெரிய வசதியை நாம் பெற்றுள்ளதால் இனிமேல் தாங்கள் கீழ்வரும் இணைய தளத்தில் படித்துத் தெரிந்துகொள்ள நமது குழுக்களில் உள்ள ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் திருப்பள்ளியெழுச்சி மன்றம் இதைச் செய்ய முன் வந்துள்ளது என்பதை நாங்கள் தங்களுக்கு தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம். அந்த இணைய தளத்தின் பெயர் பின்வருமாறு :

**www.pambanswamigal.net or www.pambanswamigal.org**

மேலும் விவரங்களுக்கு : **Email: thiruppalli@yahoo.com or 94449 58526**